# THE MORNING STAR.

**Vol. 57.** **Jaffna, Thursday 24th of June, 1897.** **No. 13.**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.


☞ TO OUR SUBSCRIBERS
Kindly remit the dues as early as possible.

*RECEIPTS OF THE MORNING STAR.*

'97

| | | |
|---|---|---|
| Straits Settlements | Messrs. K. Murugeser, N. Gunesegaram and Muttiah | 6.50 |
| Annamaduwa | Dr. V. Vallipuram | 2-00 |
| Jaffna, Town | Revs. G. J. Trimmer, W. T. Garrett and Messrs. T. C. Changarapillai and S. Mannelpillai | 6.00 |
| India | Messrs D. Jacobpillai and Arnold Chellappah | 3.00 |
| Navaly | Rev. R. Bryant | 1.25 |
| Uduppiddy | Revs. R. C. Hastings, J. Sanders Messrs. P. L. Christian, C. Arulanantham, W. Vytilingam, Sinniah and Female B. School | 10.00 |
| Manippay | Dr. T. B. Scott | 1.25 |
| Oodoovil | Miss S. R. Howland | 1.25 |
| | Female Boarding School | 2.50 |
| | Mr. S. F. G. Carpenter | 1.25 |
| | '96 | |
| Straits Settlements | Mr P Elankayer | 2.25 |
| Talawakolley | Mr. J. S. Black | 2.00 |
| Jaffna, Town | Messrs Ievers M. A., T. M. Tampoo J. P., S. Allagakoen, A. Sinnatamby, R. V. Sabapathy and J. Nathanael | |
| Manippay | Mr. Thiruvelankam | 1.25 |
| | '95 | |
| Straits Fettlements | Mr. P. Elankayer | 2.25 |
| Jaffna, Town | Dr. Kailasapillai & Mr. Godman | 2.50 |
| | '92 | |
| Jaffna, Town | Mr. Perera | 1.00 |
| | V. Vyramuttu, Manippay, for 1896—97 | 2.50 |


THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Company's Steamer "Lady Havelock" is appointed to sail from Kangesanturai for Colombo on the noon of the following dates.

Via Point Pedro 9th July.
" . 23rd do.

The "S. S. Lady Gordon" is appointed to sail from Kangesanturai for Colombo on the evening of the following dates.

via Paumban 6th. July.
" 20th do.

W. MATHER & SON.
*Agents.*

FOR SALE.

GENTLEMEN'S, LADIES', AND CHILDREN'S BOOTS AND SHOES
also Harness, Curry Combs, Brushes. Knee Caps, Driving whips, Spare reins, Bits, Horse cloths, Dubbing, Elleman's embrocation, &c.

WATERBURY WATCHES
The "Trump" Gentleman's size Rs. 8 00
Ladies' size - - - - " 12.00

*ALL AT COLOMBO PRICES*
at the Store department of
**The Jaffna Commercial Corporation Ltd.**

**Just opened**
FRESH OILMANSTORES &c.
FROM THE WELL KNOWN MAKERS
**JOHN MOIR & SON, CROSSE & BLACKWELL, &c.**
all at Colombo prices
Please try
ALEXANDER BROTHERS & Co.
1st. Cross Street,
Jaffna, 1st. June 1897.


NOTICE CALLING FOR TENDERS.

Sealed Tenders marked on the envelopes "Tender for building a market at Chankanai" will be received by the Chairman District Road Committee Jaffna up to noon on Friday June 25th, 1897.

2. Plans and specification may be seen at the District Road Committee Office, Jaffna.

3. Every tenderer will be required to make a deposit of Rs. 50 and should any person decline to enter into Contract and bond after his tender is accepted, or fail to furnish security, such deposits shall be forfeited to the District Road Committee ,Jaffna.

4. Sufficient sureties will be required to join in a bond for the due fulfilment of the contract.

5. The District Road Committee reserves to itself the right, to reject any or all tenders or to accept any portion of a tender and is further not bound to accept the lowest tender.

6. The Contractors must notify in their tenders the time required by them for the completion of the work.

7. Persons whose tenders are accepted by the District Road Committee will be required to bear the expenses of having security bonds prepared for the due fulfilment of their contract which bonds will be subject to the approval of the said Committee.

8. Every alteration should bear the initials of the tenderers, and all tenders containing alterations not bearing the tenderers' initials will be treated as informal and rejected.

P. E. Pieris,
District Road Committee's Office, Jaffna May 26, 1897. | for F. C. Fisher. Actg Chairman D. R. C.

ORDER NISI.
In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No. 843.

In the matter of the estate of the late Chinnattampi Allappichchai of Vannarponne Deceased.
Assankandumena widow of Seku Meyateen Chinnattampi of Vannarponne Vs. Petitioner.
1. Allappichchai Miskeen Saibu his
2. wife Sultan Meyateen Nachchia and
3. Cheku Meyateen Paykeeru all of Vannarponne west Respondents.

This matter of the Petition of Assankandumena widow of Seku Meyateen Chinnattampi of Vannarponne praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Chinnattampi Allappichchai of Vannarponne coming on for disposal before Samuel Haughton Esquire, District Judge on the 18th day of May 1897 in the presence of Mr. T. C. Changarappillai proctor on the part of the petitioner and the affidavit of the petitioner dated the 6th day of May 1897 having been read it is declared that the petitioner is the mother and next of kin of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to her unless the Respondent or any other person shall on or before the 30th day of June 1897 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 18thday of May 1897 | SAMUEL HAUGHTON, District Judge.

ORDER NISI.
In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No. 849.

In the matter of the estate and property of the late Nellinachan wife of Chankarapillai Murukar Deceased.
Chankarapillai Murukar of Manthovil Petitioner.
Vs.
1. Chitamparanatar Chuperamanier and wife
2. Theivanaipillai of Manthovil
3. Kathirasar Chitamparanatar of Madduvil Respondents.

This matter of the Petition of Chankarapillai Murukar of Manthovil praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Nellinachan wife of Chankarapillai Murukar of Manthovil, coming on for disposal before Samuel Haughton Esquire, District Judge, on the 17th day of June 1897 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 16th day of June 1897 having been read it is declared that the Petitioner is the lawful husband of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 20th day of July 1897 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 17th day of June 1897. | S. HAUGHTON, District Judge.

## Local & General.

*From* Colonial Secretary
*To* Govrenment Agent

Governor has received the following message from Her Majesty the Queen and Empress.
"From my heart I thank my beloved people. May God bless them."

**The Queen and Jaffna** Tuesday the 22nd inst has the brightest record in the period of Her Majesty's reign. The vast British Empire, did on that day pay due obedience to its Sovereign Queen, unique in Her reign,and little Jaffna was not wanting in its jubilation. Arrangements had all been made before by the Government Agent Mr. Fisher and his wise committee, and the 22nd inst. was looked forward to by all with joyous hopes of sharing in its festivities. The day dawned bright and agreeable except for the very strong monsoon wind. All places of business were closed save some shops which supplied sundries which the people might want. The roads were adorned with jubilee decorations. Each house-holder did his best to do his portion of the work. Plantain trees lined both sides of the roads together with varied decorations made of tender cocoanut leaves and paper flags of various patterns and colours. Flags that streamed to the wind were numerous. One in the top of St. Peter's chapel another on the belfry, a third in the Mohammadan Mosque, and numerous others added gayety to the scene. In the fort, the gateway to the jail was beautifully decorated by a splendid arch of paper in different hues, bearing the inscription. "In commemoration of the Diamond Jubilee of Her Majesty the Queen of England and Empress of India." The Motto "Diamond Jubilee" was in the arch adorned with evergreens that was erected in front of the Police lines. A third was over the gate way to the residence of the Police Magistrate displaying skilful workmanship with the words "Longer, yet longer." In many other places also there were arches and illuminations, The centre of attraction was that portion of the esplanade facing the police lines. Here the programme of the Jaffna Jubilee day was carried out. Here was an enclosure made by logs of palmyrahs with an entrance beneath a towering arch at the middle of the eastern side facing the road. Opposite to the entrance and within the enclosure a platform has been erected with ornamental arches in front and on the sides and a covered canopy—The British ensign covering the background. In front was written in large characters "God save our gracious Queen."

Promptly at 7 A. M. the Royal standard was hoisted followed by a Royal salute. A company of a police under the command of Mr. Tranchell presented arms and fired the usual salute, three rounds. Three cheers for Her Majesty the Queen were proposed by the Government Agent and heartily responded to by the assembled public. The church bells pealed forth, and solemn services of praise were held in all the churches. The poor in the meanwhile collected in large numbers and besieged the Police Lines and at 9 A. M. Messrs. Pieris, and Tranchell with the assistance of the Police Inspector and others of the police force began the distribution. The poor knew no order, and there was a host of them. The distribution was however systematic, and each poor adult received a measure of rice and five cents, while the younger ones had half a measure and five cents. The distribution was in five places within a large enclosure guarded by the police. As fast as they were served they were seated in the enclosure and when all outside had been admitted and served the whole host was let loose. At 11 A. M. the Govt. Agent entertained at breakfast the officials and others at the Queen's House.

The afternoon proceedings commenced at 5 P. M. A large and respectable audience were seated in the abovementioned enclosure and on the dais. A large crowd was standing outside and the police kept good order. The Govt. Agent arrived at 5 P. M. and standing in front of the dais, announced the names of the recipients of the two gold medals and the seven silver medals, among the latter being the Maniagar of Jaffna, Valikamam North, the Ex-Udiar of Batticotta and the present Udiar of Valanai. Pardon by the Governor was announced for all sentences to corporal punishment and of those who are in jail for nonpayment of fine. The address which was sent to Her Majesty by the Colony was read by the Government Agent and this was followed by the Brass Band of the St. Patrick's College playing the bars of the national anthem, which the assembly joined in singing. Mrs. Fisher then proceeded to plant the jubilee memorial tree on the part of the esplanade facing the Courts. The banyan tree which was planted was put in position with much formality and with cheers. The illuminations and fire-works at night were very grand, Mr. and Mrs. Fisher with family witnessing the scene from a carriage drawn close to the spot. The words "God save the Queen" blazed from the side of the fort mole, which device was a great attraction to the public. The streets and many residences and shops were illuminated with brilliant lamps and Chinese lanterns. The fire-works over, the enormous crowds dispersed at 9 P. M. with reflections on a well spent jubilee day.

**Jubilee Honours**. Two of our chief headmen have had gold medals awarded to them at the celebration of the Queen's Diamond Jubilee. The Maniyagar of Valikamam west, A. Iragunathar Mudaliar of the Governor's gate and V Saravamuttu Modr., Maniagar of Thenmarachi are the happy recipients of the said distinctions. Mr. C. Coomariah Registrar of lands, Jaffna, has been elevated to the rank of a Mudaliar.

**The Trading Company Jaffna**. Mr. W, Mather continues temporarily as the Manager of this, but it would be desirable if Mr. Mather could be prevailed upon to take up its work permanently.

**Jubilee expenses**. The expenses incurred by the Ceylon Government in connection with the Diamond Jubilee celebration are as follows:

| | |
|---|---|
| Sending volunteer troops to England | Rs. 41,815 |
| " Representatives " | 19,945 |
| Medals to Native officials | 21,784 |
| Fireworks and illuminations | 6,270 |
| Casket for address and sundries | 5,300 |
| Total | Rs. 95,114 |

It is expected that private subscriptions, besides those already sent by the churches will amount to Rs. 60,000.

**Earthquake in Calcutta**. A terrible convulsion of the earth's crust has caused widespread disaster in Calcutta and neighboring places. It took place on Saturday morning the 12th inst. and was so violent that some buildings are said to have rocked four feet. All the large buildings of the "City of Palaces" were more or less damaged. The High Court was so cracked as to be pronounced unsafe. Many buildings fell down, especially the City Hall which was in process of erection. Many lives were lost by the falling buildings. Multitudes of people had to forsake their houses, and the soldiers were obliged to leave their barracks and live in tents The shock passed from east to west, and caused ruin in Assam, and as far as Darjeeling. Many railway bridges were injured interrupting railway travel.

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

[illegible]ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௲அ௱௯௰௭ம் ௵ ஆனி ௴ ௨௪ ௳ வியாழக்கிழமை. [சங்கியை, ௨௬



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றெட்)



இந்தக் கொம்பனியாரின் "லேடிகோடன்" என்னுங் கப்பல் பின்வருந்தேதிகளிற் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாய்க் கொழும்புக்குப்போகவிருக்கின்றது.—

ஆடி ௴ 6 ௳ ஆடி ௴ 20 ௳

"லேடிஅவலக்" என்னும் கப்பல் பின்வருந்தேதிகளிற் காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாய்க் கொழும்புக்குப்போக இருக்கின்றது.

ஆடி ௴ 9 ௳ ஆடி ௴ 23 ௳

W. MATHER, & SON. Agents.

### விளம்பரம்.

மாணிப்பாய்குடி Dr. C. T. Mills அல்லது முருகேசர் எதிர்நாயகமாகியநான் சகலருக்குமறிவிப்பது யாதெனில், வட்டுமேற்கிலிருந்து காலஞ்சென்றுபோன வயிரவனுதர் சின்னத்தம்பியுடைய வளவுக்குக் கிழக்குப்புறமாகவிருக்கும் வட்டுக்கிழக்கு இறையிலுள்ள "இலந்தைப்புலமும், ஆளியகாடும்" என்கிறகாணி பர. சிலல. இலா. கூஇ. எல்லை வடக்கு ஒழுங்கை கிழக்கு முருகர் தெய்வானையும் முருகேசர் வயித்திலிங்கமும். தெற்கு அமரிக்கன் மிஷியோன். மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் யோட்ஷயானவும் சின்னத்தம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளையும்.

இந்தக்காணி ௲அ௱௯௰௨ம் ௵ தவக்கம் என்னுடையதாயிருக்கிறது சிலதுந்தநியாயத்துக்காக இதன் அறுதியுறுதி நம்பிக்கையினபேரில் முதல்வட்டுமேற்குக்குடி நாகனுதர் ஆறுமுகத்தின்பேரிலும், மறுபடி வட்டுமேற்குக்குடி காலஞ்சென்றுபோன வயிரவனுதர் நவசிவாயத்தின்பேரிலும் முடித்திருக்கிறேன். இப்போ குறித்த என்னுடையகாணியைப்பற்றி வியாச்சியமிருக்கிறபடியால் யாதொருவரும் இக்காணியை பற்றி, ஈடு, அறுதி, நன்கொடை, உபசமம், முதலியன யாதொன்றும் செய்யவும் செய்விக்கவும்படாதென்றும் விசேஷமாக எந்தப்பிரசித்த நொத்தாரிசும் இக்காணியைப்பற்றி எவ்வித உறுதியாவது சாதனமாவது எழுதப்படாதென்றும் இத்தால் வெளிப்படுத்தி விளம்பரம் பண்ணுகிறேன். C. T. Mills.

### புத்தக விளம்பரம்.

காலஞ்சென்ற ஏரேமியா உபாத்தியாரால் இயற்றப்பட்ட வாசிணைப்புத்தகங்கள் விற்பனவுக்காயத்தம். உதயதாரகை மனேச்சரிடம வாங்கவும்.

### விளம்பரம்.

பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி மேற்கு இராமு பெண் வள்ளியம்மையாகிய நான் இத்தாற் சகலருக்குமறிவிப்பது: எனதுபுருஷன் ஆள்வார் இராமு என்பவர் தனக்குள்ள வருத்தத்தினிமித்தம் சிதம்பரம் போய்த் தன் நோய்களைத் தீர்க்கும்நோக்கமாய் 1895 ம் ௵ ஆடிமாசம்வரையில் இந்த ஊரைவிட்டு பிரயாணப்பட்டார். அவரின்னும் இந்த ஊருக்கு வரவில்லை. அவரைக் கண்டோமென்று சொல்லுவாருமில்லை. அவரின் வயது 47. அவர் நிறம் சிவலை, பிள்ளைகள் நால்வர். இவர் நிற்குமிடத்தை அறிந்தவர்கள் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

### காயாசுவாதக் குளிகை.

ஆயுள்வேதமுறை மூலிகையல்லாமல் இரசம்பாஷாண முதலிய நச்சுசரக்குகள் ஒன்றும் இதிலே சேர்க்கப்படவில்லை. இக்குளிகை காயாசுவாதத்துக்கு ஆகேண்டவேங்கை. ஒரு குளிகை சாப்பிட்டவுடன் மொய்யல் மயக்கம் முதலியகுணங்கள் நீங்கி நல்லறிவுண்டாகும். மூன்று நாள் ஆறுபொழுதில் நல்லசுகம்காணும். இந்நோய் உண்டாகும் குணம் காணும்போது ஒரு குளிகைசாப்பிட்டால் அந்நோய் வாராமல் தடுத்துப்போடும. பிரசவ வீட்டில் தட்டுமுதலிய தண்ணீர்கருப்பையில் தங்கி நிற்பதினால்தான் இக்கொடியநோய் உண்டாகிறது. பிரசவித்த அன்றுமுதல் மூன்றுநாளைக்கு ஒவ்வொருவேளை இக்குளிகையைச் சாப்பிட்டால் மேலேசொல்லிய தண்ணீர் எல்லாம் வெளிப்பட்டு நல்ல சுகம் உண்டாகும். காயாசுவாதம் கிட்டவும் அணுகாது. பிரசவம்செய்யும் செல்வர் புத்திரிகள் ஒவ்வொருவீட்டிலும் இக்குளிகை கைவசம் இருப்பது நல்லது. குளிகைவிலை 12க்கு 6 ரூபாய்.

தபாற்சிலவுமேலதிகம். இங்ஙனம், C. W. Mann.
Ayul-vedia Physician, Railway Station.
Pattampy, Malabar District, India.


## உதயதாரகை.

### ௲அ௱௯௰௭ம் ௵ ஆனி ௴ ௨௪ ௳.

வச்சிரயூபிலி மகோற்சவம்.—The Queen's Diamond Jubilee.—௲அ௱௮௰௭ம் ௵ அனுசரிக்கப்பெற்ற ஐம்பதாம்வருட (Golden Jubilee) சொர்ன யூபிலிக்கொண்டாட்டம் முந்தைநாள் நடந்த காரியம்போல எம் ஞாபகத்திலிருக்க இப்போது அறுபதாம் வருடமாகிய (Diamond Jubilee) வச்சிரயூபிலிகொண்டாட்டமுங் கண்டு களிக்கப்பெற்றோம்.

முன் செய்திருந்த ஒழுங்குப்படி முந்தைநாள் செவ்வாய்க்கிழமை காலை ஏழுமணிக்கு முற்றவெளியிலே அங்கிலோராச்சியக் கொடியுயர்த்தப்பட்டு அதி அலங்காரமாய் ஆகாயத்திலசைந்துகொண்டுநிற்க, கோட்டைக்குள்ளேற்றப்பட்டிருந்த பீரங்கிகள் தம் பேழ்வாயைத் திறந்து திடீர் திடீரென்றதிர, கிறிஸ்த ஆலயங்கள், சைவசமயக் கோவில்கள், பள்ளிவாசல்களிலுள்ள மணிகளெல்லாம் டிங் டோங் டிங்டோங் என ஆனந்த சத்தமிட்டன. எட்டுமணிவரையில் ஒவ்வொருமதத்தினரும் தத்தமாலயங்களிற்கூடிக் கடவுளைத் தோத்திரித்ததோடு இராணிநாயகியார்க்குச் சுகபெலமும் நீண்ட ஆயுசும் கிடைக்கும்படிக்கும் பிரார்த்தித்தனர். முன்னேரம் ஒன்பதுமணிவரையில் முற்றவெளியிற் திரளாய் வந்து கூடியிருந்த வறிஞரில் வளர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருபடியரிசியும் ஐந்தசதமுங் கொடுக்கப்படச் சிறுவர்களுக்கு அளுக்கரைப்படியரிசியும் ஐவைந்துசதமுங்கொடுக்கப்பட்டது. ஊர்காவற்றுறையாதிய வேறிடங்களிலும் இவ்விததருமங்கள் நடைபெற்றன. பின்னேரம் ஐந்துமணியளவில் ஏசண்டர் பிஷர் துரையவர்கள், அடிக்கு நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் கடன்கொடுக்கவியலாதபடியால் மறியலிலிருப்பவர்களுக்கும் மன்னிப்பருளப்பட்டிருக்கிறதென்றும, யூபிலி முத்திரைகள் யார் யார்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவித்ததோடு இராணிக்கனுப்பும்படி எழுதப்பட்ட வாழ்த்துப்பத்திரத்தை யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலுமிருந்து முற்றவெளியில்வந்துகூடியிருந்தோர் யாவருங் கேட்கும்படி வாசித்துக் கையொப்பங்களும் வாங்கினர். அதன்பின் யூபிலி ஞாபக விருட்சக்கன்று பிஷர் துரைசானியால் நாட்டப்பட்டது. முடிவில் சம்பற்றிறிக் கல்லூரிக் கீதவகுப்பாரினுதவியோடு இராணியைக் காத்தருளும் என்னும் கீதம் பாடப்பட்டது. பொழுதுபட்டிருட்டாயபின் சீதாரியிலுள்ள மாளிகைகளெல்லாந் தீபாலங்காரமபெறச் சீர்மையிலிருந்தெடுப்பிக்கப்பட்ட அதிவிசித்திரவிளுதை வாணவிளையாட்டுகள் நடைபெற்றன. வாணக்காட்சி வந்தோரெவர்க்குமதி யின்பத்தையும் பிரமிப்பையுங் கொடுத்தது.

அதியுத்தமகாருண்ணிய மகத்துவந்தங்கிய பிரித்தானிய ராணியும் இந்திய சக்கரவர்த்தினியுமாகிய அலெக்சன்டிறினா விக்தோறியா பெருமாட்டியார் சிங்காசனமேறியது ௲அ௱௩௰௭ம் ௵ ஆனி ௴ ௨௰ ௳ திகதியாகையாற் சென்ற ௨௰ந் திகதி அவரது ஆளுகையின் அறுபதாம் வருடம் முற்றுப்பெற இப்பொழுது அறுபத்தோராம் வருட ஆளுகையாரம்பித்துவிட்டது. பிரித்தானிய ராச்சிய கிரீடந்தாங்கி அரசாண்ட இராயர்களுள் அல்லது உலகத்திலுள்ள எத்தேசத்திலாவது எச்சாதியாருளாவது இதுகாறும் ஆளுகை செலுத்திய முடிமன்னருளெவராவது இவ்வளவு நீண்டதும், இவ்வளவு உன்னத மகத்துவந்தங்கியதுமான ஆளுகைநடத்திலர். விக்தோரியாராணியின் காலத்தில் மனுஷசாதிக்குண்டானநன்மைகள் சுகானுபவசலாக்கியங்கள் இதற்குமுன்னிருந்தஎந்தராயரின்காலத்திலாவதுகாணப்பட்டதில்லை. குணதிசயங்களையெடுத்துப் பார்ப்பினும், "தன்னுயிர்போலவேமன்னுயிரோம்புந் தயாளசீமாட்டியும்"மனைவியாய்,மாதாவாய் இல்லாச்சிரமநெறிஅனுசரிக்கும் வகையில் யாருமெப்போதுந் தம்மிருதயத்திருத்திப் போற்றிப் பார்த்து நடத்தற்கேற்றநன்முன்மாதிரியுமாயிருக்கும் விக்தோறியா பெருமாட்டியின் குணதிசயங்களைப்பொருந்தினோர் யாராவது இதுவரையிற் தோன்றிய கிரீடாதிபதிகளுளுண்டோ அறியோம். ஆகவே முன்னெருபோதும் நடவாதவகையாய் மெய்யான உள்ளக்கிளர்ச்சியோடு உலகம்முழுவதுமெம் இராணிநாயகியின் வச்சிரயூபிலியைக்கொண்டாடு மிக்காலத்திலே அதி ஏராளமான நன்மைகளையடைந்தவர்களாகிய நாமும் ஆனந்த சந்தோஷமடைவதோடு, இன்னும் பல வருடங்களாய் விக்தோறியாபெருமாட்டியின் ஆளுகைகாலம நீடிக்கச் செய்யும்படி எம்பெருமானைப் பிரார்த்திப்பது கடமையாகும்.

விக்தோறியாராணியார் இங்கிலாந்துதேசத்தை அரசாண்ட மூன்றும் ஜோர்ச்சுஇராயரின் நான்காங்குமாரராகிய டியூக்அவ்கென்ற் என்பவரின் ஏகபுத்திரியாய் ௲அ௱௧௯ம் ௵ வைகாசி௴ ௨௪ ௳ இப்பூவுலகில் வதரித்தனர். ஜோர்ச்சு அரசரின் முதல்மூன்று புத்திரரின் சுதந்தரவாளிகளில்லாதபோக நாலாங்குமாரரின் ஏகமகவாகிய விக்தோறியாமாதாசி சிங்காசனத்துக்கு வருவாரென யாரும் நினைத்திலர். இராணியார் நாலுமாதக் குழந்தையாயிருக்கும்போதே அவரின் தந்தையார் மரித்துப்போகத் தாயாரே அவரை இவ்வளவு குணதிசயங்களுடையவராய் வளர்த்தனர். இவரின் ஒன்பதாம் பராயத்திலேயே மற்றஞ் சுதந்தரவாளிகளற்றுப்போக இவர் சிம்மாசனபதியாய்வரல் கூடுமென்றெண்ணற்கிடமுண்டாயது. அவ்வெண்ணம் மெய்ப்பட ௲அ௱௩௰௭ம் ௵ ஆனி ௴ ௨௰ ௳ காலை ஐந்துமணிக்குக் கந்தர்பரியின்மகாமேற்றிராணியாரும் லோட்செம்பளேனும் விக்தோறியா மாதரசியை நித்திரைப் படுக்கையிலிருந்தெழுப்பி "இங்கிலந்தின் இராணியாயினீர்" என அறிவித்தனர். இவரது குணதிசயங்களை அறிந்தவர்களாகிய பிரசைகள்யாவரும் இச்செய்தியை அதிசந்தோஷத்தோடேற்றுக்கொண்டனர்.

இராணியார் ௲அ௱௪௰ம் ௵ மாசி ௴ ௰ ௳ தமது மைத்துனராகிய பிறின்ஸ் அல்பேட் என்பவரை விவாகஞ்செய்து உடலுமுயிருமென விசைந்தில்லறம்நடத்தினர். பிறின்ஸ் அல்பேட் இராணியினலோசனைக்குரிய மந்திரியாகி இங்கிலந்தின் கல்விவிருத்தி சாஸ்திரவிருத்திக்கேற்ற பற்பல முயற்சிகளையு நடத்தி ௲அ௱௬௰௧ம் ௵ மார்கழி ௴ ௧௪ ௳ திகதி பரலோகபிராப்தியாயினர். இராணிநாயகியார்க்கிது தாங்கொணுத் துயரமாயினும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு இராச்சியபாரத்தோடு குடும்பத்தையும் நெறிதவறாது நடத்திவந்தனர். இராணிக்கு ஆண்பிள்ளைகள் நால்வரும் பெண்பிள்ளைகள் ஐவருமாய் ஒன்பதுபுத்திரர்கள். இவர்களுள் அலிஸ்மோட்மேறிஎன்னும் புத்திரியும் லியோபோல்ட் என்னும் புத்திரனுங் காலஞ்சென்றுபோக எஞ்சியோருயிரோடிருக்கின்றனர். முதற்பிள்ளையாகிய விக்தோறியாமாது ஜேர்மன்சக்கரவர்த்தியாகிய பிறெதெரிக் என்பவரை மணம்புடித்தனர். தற்கால ஜேர்மன் சக்கரவர்த்தி இவரின் குமாரனே. இரண்டாமகவாகிய அல்பேட்எட்வேட் உவேல்ஸ இளவரசரே இராணிக்குத் பின் பட்டத்திற்குரியர். இவர் தென்மார்க்கின் இராசகுமாரியை விவாகஞ்செய்தவர். ஐரோப்பாவின் மற்றும் இராசவம்சங்களிலும் இராணியின் பிள்ளைகள் கலந்திருக்கின்றனர். இராணியின் இரண்டாங்குமாரன், சாக்ஸ் கோபேக்கோதா என்னும் ஜேர்மன்நாட்டின தற்கால அதிபதியாய் விளங்குகின்றனர். தற்கால ருஷிய ராணியும் எம் இராணிநாயகியாரின் பௌத்திரியே. இராணியின்பிற்சந்ததியாராய் எழுபதுபேர் இப்பொழுது உயிரோடிருக்கின்றனர். இவர்களிற் புத்திரபுத்திரிகளெழுவர். பௌத்திர பௌத்திரிகள் முப்பத்துமூவர், பிர பௌத்திர பௌத்திரிகள் முப்பதின்மர். இராணிக்குப்பின் பட்டத்திற்குரியவரான உவேல்ஸ இளவரசர்க்கு வயது ஐம்பத்தைந்து. அவர்க்குப் பின் பட்டத்திற்கு வரவேண்டியவரான டியூக் அவ்யோர்க்கின் வயது முப்பத்திரண்டு. இவர்க்குப்பின் பட்டத்திற்குரியவரான பிறின்ஸ எட்வேட்டின் வயது மூன்று. கட்பார்வையில் மாத்திரம் சற்றே குறைவுகாணப்பட்டிருப்பதன்றி மற்றைப்படி இன்னும் பலவருடங்களுக்குயிரோடிருக்கக்கூடிய திடகாத்திரமும் தேகசௌக்கியமும் இராணிக்குண்டென்பது வைத்தியபண்டிதர்மார் தீர்ப்பு.

இராணிநாயகியார்இராச்சியபாரஞ் செய்தகாலத்தில் லோட் மெல்போண், சேர் றப்பேட் பீல், லோட் யோன் றசெல்,லோட் டேர்பி,லோட் அபடீன,லோட் பால்மேஷறன், லோட் பீக்கன்ஸ்வீல்ட் (டிசிறேலி). மெஸ். கிளாட்ஸ்ரோன்,லோட் றோஸ்பரி, லோட் சலிஸ்பரியென்னும் பிரபலம்பெற்றமந்திரிமார் இராச்சியகலிணங்கைப்பிடித்து நடத்தினர். இராணியின் காலத்தில் ஏறக்குறையத் தொண்ணூறிலட்சம் சதுரமைல் விஸ்தாரமான தேசம் புதிதாய்ச்சேர்க்கப்பட்டது. அதில் நியூசீலன், பாகலன், கொங்கொங், நத்தால், சிந்து, பஞ்சாப், நாகப்பூர், அயோத்தி, லபுவான், வான்கூவர், பொற்கரைநாடு, கொலம்பியா, பெறிம், கேளலூன், லாகோஸ, மேல் சிறிதுவாலான்ட், வீச்சி, வடபோர்னியோ, நியுகினி ஆதிய கலனிகளும் ஆபிரிக்காவாதிய தேசங்களும் அடங்கும். உலகத்திலுள்ள இராச்சியங்களுட் பிரித்தானியராச்சியமே பெரியதும் விசேஷமுமானது. ஏறக்குறையப் பூமியின் தரையில் ஏழிலொருபங்கும் சனத்தொகையில் நான்கிலொருபங்கும் இராணியின் கீழுள்ளன. சாதிபேதம் மதபேதங்கட்களவில்லை. இந்த யூபிலிகொண்டாட்டத்தில் ஏறக்குறைய முப்பத்தைந்து கோடி சனங்கள் இராணியைப் போற்றித் துதித்து அவர்க்காகப் பிரார்த்திக்கின்றனர்.

விக்தோரியாராணியின் ஆளுகைகாலமாகிய சென்ற அறுபதுவருடத்திலும் யாழ்ப்பாணம் இலங்கை இந்தியா தேசங்களும் மற்றும் பிரித்தானிய நாடுகளும் பெற்றனுபவிக்கும் நன்மைக்களவில்லை. "அம்மையன்கரியன் அட்கொல்லிநாக"ளாதிய சோரர் பயத்தினாலும், ஆனை, புலி, கரடி ஆதிய மிருகபயத்தினாலும் நடுநடுங்கிக்கொண்டு சீவியஞ்செய்தவர்களும் அற்பதூரப் பிரயாணத்துக்கும் நன்மை தீமை சொல்லிப் புறப்பட்டவர்களுமான முன்னோர்பலர் இப்போது முயிரோடிருக்கின்றனர். சென்ற அறுபதுவருடத்திலும் இவ்வூர் அடைந்திருக்கும் மாறுதல்களைவையென அவர்களே நன்குவிரித்துரைத்தல்கூடும். "அட்டைகடியுமரியவழிநடையுங் கட்டையிடறுதலுங் காணலாங்கண்டியிலே" யென்னும் பூர்வீகர் பாட்டுப் பொய்யாக, காடுகள் செடிகளெல்லாம் வெட்டப்பட்டுப் பாலனும் பயமின்றிப் பிரயாணஞ்செய்யத்தக்க கற்றெருக்கள் போடப்பட்டிருக்கின்றன. ஊர்கள்தோறும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மருந்துச்சாலைகள் வைத்தியசாலைகளாற் சனங்களனுபவிக்கும் நன்மைகட்களவில்லை. நூறு, ஆயிரக்கணக்கானோரை வாரியெடுத்து முழுக்கிராமங்களை நாசம்பண்ணிய கொதாரி வைசூரியாதிய நோய்கள் தற்போது வைத்தியரின் விடாமுயற்சியால் மிகுதியும் வலியிழந்திருக்கின்றன. தேசமெங்கும் பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் மலிந்து பொலிந்து விளங்குவதினால் அறிவுப்பெருக்க முண்டாகின்றது. ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நீதித்தலங்களிலே துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமும் ஒழுங்காய்நடைபெறுகின்றன. உடன்கட்டையேறலாதிய அறிவீனங்களாற் பாதிக்கப்பட்டுச் சிறைத்தனத்திலிருந்தப்பட்ட பெண்கள் விக்தோறியாராணியின் காலத்திலே சிறைத்தனம் நீங்கிச் சுயாதீனம்பெறவும் கல்வியறிவடையவு மேற்ற பலவகையான வெத்தனங்களேற்பாடாயின. அஞ்ஞானந்தகாரத்திலும் மரணநிழலிலுமிருந்தாரநேகர் மெய்ஞ்ஞானவொளியையடைந்தனர்.

தத்துவசாஸ்திரம், வானசாஸ்திரம், இரசாயனம், பூபந்தசாஸ்திரம், தாபரசாஸ்திரம, வைத்தியசாஸ்திர மாதியவற்றில் சென்ற அறுபதுவருடங்களிற் கண்டறியப்பட்ட நூதனதிசயங்களும் அவற்றாலுண்டான நன்மைகளும் விபரிப்பக்கடங்கா. நீராவிசத்தியினாலியக்கப்படும் கைத்தொழிலியந்திரங்கள், புகைவண்டி, புகைக்கப்பலாதியவற்றாலுலகிற்குண்டான நன்மைகள் மெத்த! மெத்த! மின்சாரசத்தினாலுண்டாக்கப்பட்டிருக்கும் மின்தந்தி, மின்சாரவெளிச்சம, தூரதொனி இயந்திரம், பேசும் இயந்திரமாதியன எவ்வளவு அதிசயகரமானவை. அவற்றால் மனுக்குலத்தோர் அடைந்திருக்கு சுகமும் சலாக்கியங்களுமெவ்வளவு!

1 "மரக்கலமோவாயுவேகம்—கடித
வாசகப்போக்குமிகுமனவேகம்
தரைப்பயணம் புகைவேகம்—மனித
சஞ்சாரமில்லாதகாடுதடாகம்.
2 பத்திவித்தாரமாய்ப்போச்சு—பஞ்ச
பூதங்களேவற்றொழிற்காரராச்சு
சித்தம்நெருப்புநீர்மூச்சு—கொண்டு
நிலக்கரிவாயுவாகாயத்துவீச்சு.
3 பிரசைகள்நாளுஞ்செய்தபாக்யம்—இராச
பெருமாட்டிகாலத்தவாழ்வுசலாக்கியம்
அரசுக்குள்ளாரிந்தயோக்கியம்—பெற்றோர்
அங்கிலோராசரீகரெங்கள்போக்யம்.
4 பலம்பெற்றராக்கினிவாழி—அறு
பான்வருடத்துமகோற்சவம்வாழி
இலங்கையோடிந்தியாவாழி – சிறந்
தியாழ்ப்பாணமென்றும் புகழ்பெற்றுவாழி"

### விக்தோரியா இராணி நாயகியார் அனுப்பிய தந்திச் சமாசாரம்.

THE QUEEN'S MESSAGE.

"எனது அன்பான சனங்களுக்கு என் முழு இருதயத்தோடும் நன்றி கூறுகின்றேன். தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக."

இராணியவர்கள் இச்செய்தியை நேற்றுக் காலமே தேசாதிபதியவர்களுக்கனுப்ப, தேசாதிபதியவர்கள் ஏசண்டருக்கனுப்ப, ஏசண்டர் நமக்கனுப்பினர். நாம் நம் பத்திரிமானிகள் மூலம் எல்லோர்க்குமனுப்புகின்றோம்.

## யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather.—இரண்டுமூன்று தினங்களாய்த் தூக்கத்திலிருந்த காற்று மறுபடியும் மும்முரமாய் வீசுகின்றது. சில இடங்களில மழையுந் தூறியிருக்கின்றது.

உத்தியோகமாற்றம்.—Officers Transferred.—யாழ்ப்பாணக்கச்சேரி இரண்டாம் முதலியாராகவிருந்து காலஞ்சென்றுபோன மெஸ். ஜே. ப. தில்லையம்பலத்தினிடத்தற்குத் திருக்கோணமலை கச்சேரிமுதலியாராயிருந்த மெஸ். சபாரத்தினம் நியமனமாக, இவரிடத்துக்கு யாழ்ப்பாணக்கச்சேரியில் லேககராயிருந்து பின் வவனியவிளாங்குளக்கச்சேரி முதலியாராய் நியமனம்பெற்ற மெஸ. பிலிப்ஸ நியோகிக்கப்பட்டனர். வவனியவிளாங்குளக் கச்சேரி முதலியார்வேலை மெஸ். குமாரகுலசிங்கம் பார் என்பவர்க்காயிற்று. இவர் கொழும்புத் தமிழ்ச் சிரேட்டமுதலியார் மெஸ. குமாரகுலசிங்கமவர்களின கனிட்டர்.

குற்றவிசாரணைக்காரர்.—Inquirers into Crime.—ஊர்கடோறும் தீமை அதிகரிப்பதைத் தடுத்தற்கான வழிவகைதேடிய தேசாதிபதியவர்கள்,மிகுதியும் அவ்வவ்விடத்து மணியகாரன்மாரைக் குற்றவிசாரணைகள் செய்யுமுத்தியோகஸதர்களாகவும் நியோகித்திருக்கின்றனர்.

முத்திரைக் கண்ணியம்.—Medals.—வடமாகாணத்திற்கென்று குறிக்கப்பட்டிருந்த பொன்முத்திரைகளிரண்டில் ஒன்று வலிகாமம்மேற்குமணியம் இராசவாசல் இரகுநாத முதலியார்க்கும் மற்றது தென்மராட்சி மணியம் மெஸ். சரவணமுத்து அவர்களுக்கும் அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணமணியம் மெஸ். தம்பு, வலிகாமம் வடக்குமணியம் மெஸ சின்னப்பு, வட்டுக்கோட்டை மெஸ். முருகஉடையார், வேலவன உடையார் என்பவர்களுக்கு வெள்ளிமுத்திரைகளளிக்கப்பட்டன. எஞ்சிய வெள்ளி முத்திரைகள் நான்கும் மன்னர், முல்லைத்தீவு, வவனியவிளாங்குளப்பகுதிகளிலுள்ள தலைமைக்காரர்க்குக் கொடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் முந்திக்கொண்டது.—Jaffna ahead.—இராணியின் யூபிலி ஞாபகசின்னமாய்க் கொழும்பில் ஸதாபிக்கப்படும் தீராப் பிணியாளர் சாலைக்காக யாழ்ப்பாணத்திற் சேர்க்கப்பட்ட பணமே மற்றும் மாகாணங்களிற் சேர்க்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் கூடவெனக் கொழும்புப்பத்திரங்கள் வீதந்து புகழ்ந்து பேசுகின்றன. ஏறக்குறைய மூவாயிரம் ரூபாய் வடமாகாணத்திலிருந்தனுப்பியாயிற்று. முழுத்தொகை ஐயாயிரம் ரூபாவரையில். இந்தியபஞ்ச உதவிக்காகவும் ஏறக்குறைய இவ்வளவுபணம சேகரிக்கப்பட்டிருக்கிறதாகவே யாழ்ப்பாணிகள் கொடையாளிகளென்பது பிரத்தியட்சமாகின்றது. யாழ்ப்பாணிகளின் செய்கையிற் பிரீதிகொண்டிருக்கும் சேர் யோசேட் றிட்கவே தேசாதிபதியவர்கள் இராணியின் யூபிலிவருடமாகிய இவ்வருடத்திலேயே யாழ்ப்பாணப்புகைவீதிசகுமுத்தரவளிப்பாரோ?

நெல்விலை.—Price High.—இந்தியாவின் பஞ்சத்தினால் அத்தேசத்திலே நெல்விலையேற இங்கேயும் விலைநாளொருவண்ணமெழும்புகின்றது. நெல் பறையொன்று பணம் மூப்பதாயிற்று.

